Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் ( 8   திருவள்ளுவர் ஆண்டு 2028   ஐப்பசி 18   ( 03 - 11 - 1992 )   செவ்வாய்க்கிழமை   ஓசை 259

## "கடலகவளம்" பாடம் அறிமுகம்

தமிழீழ கடல்வளம் பற்றிய அறிவை பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்துவதற்கான செயற் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தமிழீழத்தின் முக்கிய வளங்களில் ஒன்றாகிய கடல்வளம்பற்றிய அறிவை மாணவர் அறியக்கூடிய வாய்ப்பைத்தற்போது அமுலில் உள்ள பாடத்திட்டம் கொண்டிருக்கவில்லைஎன்ற குறையைப் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனைக்கருத்திற் கொண்டு பாடசாலையின் கலைத்திட்டத்தில் ''கடலக வளம்'' பற்றிய பாடப்பரப்பு சேர்க்கப்படவேண்டும் என்னும் கருத்தை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் திரு அ. துரைராஜா அவர்களின் தலைமையில் கூடியகுழு தீர்மானித்துள்ளது. இவ்வாறு யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறைப் பிரதம ஆலோசகர் பேராசிரியர் க.கணேசலிங்கம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்செய்திக்குறிப்பில் இதற்கேற்ப 1993-ம் ஆண்டு எமதுபிரதேசப் பாடசாலைகளில் ''கடலக வளம்'' பாடத்தைக் கற்பிக்க வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகளை (4ஆம் பக்கம் பார்க்க)

# இவ்வருட இறுதிக்குள் யுத்தம் முடிவிற்கு வந்தாக வேண்டும்

## இராணுவத்தை ஒத்துழைக்குமாறு பிரதமர் விஜயதுங்க கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தத்தை எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள் முடிவுக்கு கொண்டு வரவேண்டுமென பிரதமர் டி. பி. விஜயதுங்க தெரிவித்தார். கடந்த சனிக்கிழமை வவுனியா தச்சன் குள பிரதான இராணுவ முகாமில் படையினர் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இவ்வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் அரசாங்கத்திற்கு தினமும் 27 கோடி ரூபா செலவாகின்றது ஆகையினால் இவ் யுத்தத்தை இரு மாதங்களுக்குள் முடிவுக்கு கொண்டு வரவேண்டும் இதற்கேற்ற வகையில் படையினர் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இராணுவநடவடிக்கையைத் துரிதப்படுத்துவதற்கும், மனச்சோர்வுற்றுள்ள படையினரை உற்சாகமூட்டவும் சிறிலங்கா பிரதமர் டி. பி. விஜயதுங்க சூறாவளிப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இச்சுற்றுப் பயணத்தின் ஒரு கட்டமாக வவுனியா படைமுகாம்களுக்கும், மன்னார் படை முகாம்களுக்கும் விஜயம்செய்துள்ளமை தெரிந்ததே.

## வயிற்றோட்ட நோய்க்கு மூளாயில் 3 சிறுவர் பலி

[யாழ்ப்பாணம்]

வயிற்றோட்ட நோய் காரணமாக மூளாயில் மட்டும் மூன்று குழந்தைகள் கடந்த வாரம் மரணமடைந்துள்ளன.

அழகரத்தினம் பிரதீபா (வயது 4 மாதம்), கணேசலிங்கம் அஜந்தா (வய 6 மாதம்) ஆகிய குழந்தைகள் உட்பட மேலும்ஒரு குழந்தை மேற்படி நோய் காரணமாக மரணமடைந்துள்ளது.

யாழ் குடாவில் கடந்த சில வார காலமாக வயிற்றோட்ட நோய் மிகத் தீவிரமாக பரவி வருகிறது. இதனால் இது வரை இருபதுக்கும் மேற்பட்டோர் மரணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

(க)

## வடமராட்சி பகுதியில் இரண்டு குழந்தைகள் பலி

வடமராட்சியில் வயிற்றோட்ட நோய்க்கு இரு குழந்தைகள் நேற்று பலியாகின. நேற்றுக்காலை வயிற்றோட்ட நோயினால் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டபின் அங்கிருநது யாழ் போதனாவைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட பருத்தித்துறையைச்சேர்ந்த ஜீவகுமார் அனோயன் (18 மாதம்) என்ற குழந்தை மாலை ஏழுமணிக்கு மரணமானார். பருத்தித்துறையைச் சேர்ந்த ஜெயபாபு பிறிசிய ஜான்சி (வயது 3) என்ற சிறுமி காலை 10.00 மணிக்கு மரணமானார்

## க.பொ.த.முன்னோடிதேர்வு விடைத்தாள் திருத்தம்

[யாழ்ப்பாணம்]

க. பொ. த. சாதாரண தரத்திற்கான முன்னோடிப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் வேலைகள் எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

இதனையொட்டி கட்டுப்பாட்டுப் பரீட்சகர்கள், பிரதம பரீட்சகர்கள் ஆகியோருக்கான அறிவுறுத்தற் கூட்டம் நாளையும், உதவிப்பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம் நாளை மறுதினமும் யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் காலை 9 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பணியில் ஈடுபடும் அனைத்து உத்தியோகத்தர்களும் இக்கூட்டங்களில் தவறாது பங்குபற்றும் படியும் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

நியமனக் கடிதம் கிடைக்காத உத்தியோகத்தர்கள் மேற்படி கூட்டத்திற்குச் சமுகமளித்து நியமனக் கடிதங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## மாநகரசபை நடாத்தும் மாணவருக்கான போட்டிகள்

(மானிப்பாய்)

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் மாநகராட்சி மன்றம் தனது பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, சுவரொட்டிப் போட்டி என்பவற்றை நடத்தவுள்ளது. இப்போட்டியானது சுகாதார சம்பந்தமான விடயங்களைச்சார்ந்தவையாகவே இருக்கும்.

யுனிசெவ் உதவியுடன் நடத்தப்பட இருக்கும் இப்போட்டிகள் எதிர்வரும் 7-11-92 எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிமுதல் யாழ் இந்துமகளிர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி சேகரிப்பு

மீட்புநிதி தொடர்பான நேர அட்டவணை தமிழீழ மீட்புநிதிப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூர், தீவகம், காரைநகர், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்



வீரவேங்கை இராமு

## மணலாறை ஆக்கிரமிக்க சிங்கள படைகள் முயற்சி

(யாழ்ப்பாணம்)

மணலாறு பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடிய ஏது நிலை தற்பொழுது காணப்படுகிறது. இராணுவ அசைவுகள் பற்றி விடு

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரை மணலாறு மாவட்டம் உயிர் போன்றது. அந்த உயிரை விடுதலைப்புலிகள் இழக்கத் தயாராக இல்லை.

மணலாறு பகுதியில் ...

...கள்நன்கு அறிவர் என தெரிவித்தார்.

### தென் பகுதி பல்கலைக்கழகங்களில்

## பதிவு செய்யாத மாணவருக்கு கால அவகாசம்

பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுத் தலைவர் பேராதனை, மொறட்டுவ, பல்கலைக்கழகங்களுடன் தங்களை பதிவு செய்ய பிந்திய மாணவர்களுக்கு கால அவகாசம் வழங்க சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே சம்பந்தப்பட்ட மாணவர்கள் தாங்கள் பல்கலைக்கழக பதிவாளருக்கு அனுப்பிய கடிதங்களின் தொடர்பு இலக்கங்களை உள்ளடக்கி ஒவ்வொருவரும் தங்களை அனுமதிக்கும்படி தனித்தனி மேன் முறையீட்டுக் கடிதங்களை எழுதி யாழ். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடம் உடனடியாக கையளித்தால் அவர்கள் அவற்றை தற்சமயம் கொழும்பில் உள்ள யாழ் அரச அதிபரிடம் கையளிப்பார்கள். இதை 3-ம் அல்லது 4-ம் திகதி புறப்பட இருக்கும் குமண கப்பல் மூலம் அனுப்ப சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் நடவடிக்கை எடுப்பார்கள். இவ்வாறு யாழ். அரச அதிபர் செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

### யாழ். பல்கலை விரிவுரையாளருக்கு

## மோட்டார் சைக்கிளும்

## க. பொ. த. (சா/த) பரீட்சை

## க. பொ. த. (சா/த) பரீட்சை டிசம்பர் 7இல் ஆரம்பம்

(கொழும்பு)

க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை நாடுமுழுவதும் எதிர்வரும் டிசம்பர் 7ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் என பரீட்சை ஆணையாளர் திரு, ஆதர் வெதமுல்ல அறிவித்துள்ளார்.

7ஆம் திகதி ஆரம்பமாகும் மேற்படி பரீட்சை 17ஆம் திகதியுடன் முடிவடையும். இப் பரீட்சைக்கு நாடு முழுவதும் மொத்தம் ஐந்துலட்சத்து இருபத்திரண்டாயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர். இவர்களில் மூன்று லட்சத்து ஐம்பதினாயிரம் பேர் பாடசாலைகளூடாகவும் ஏனையோர் தனிப்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவேங்கை இராமு

30-10-92 யாழ்.மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் போராளி வீரவேங்கை இராமு (முருகையா இராமகிருஸ்ணன் கைதடி வடக்கு) சுகவீனம் காரணமாக சாவடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

ளக் கூடிய ஏது நிலை தற்பொழுது காணப்படுகிறது. இராணுவ அசைவுகள் பற்றி விடுதலைப் புலிகள் நன்குதெரிந்து வைத்திருப்பதனால் அதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள விடுதலைபுலிகள்தயாராகவே உள்ளனர் இவ்வாறு முல்லைத்தீவு-மணலாறு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இராதமிழன்பன் புலிகளின் குரலுக்கு தெரிவித்துள்ளனர்

மேலும் அவர் கூறுகையில், தமிழீழத்தின் இதயம் மணலாறு அந்த இதயத்தைக் குத்திக் கிழித்தால்! தமிழீழத்தைத் துண்டாடி அதனைச்சிதைத்து விடலாம் என சிறிலங்காஅரசு எண்ணுகிறது. அதற்காகவே அ மணலாற்றின் மீது தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறது.

கள் இழக்கத் தயாராக இல்லை.

மணலாறு பகுதியிலுள்ள இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக கண்காணித்து வருகின்றனர். எனவே இராணுவத்தின் அசைவு பற்றி விடுதலைப்புலி

## மோட்டார் சைக்கிளும் மண்ணெண்ணெயும்

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எதிர்நோக்கும் போக்குவரத்துப் பிரச்சினைகளைக் கவனத்திற்கொண்டு தீர்வையற்ற முறையில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலைமாவட்டமுகாம்களில் 35,000 அகதிகள் தஞ்சம்

திருக்கோணமலை மாவட்டத்தில் சுமார் 26 அகதிகள் முகாம்களில் 4952 குடும்பங்களை சேர்ந்த 19,223 பேர் தங்கியுள்ளனர்

இதனைவிட முன்னர் அகதிகள் முகாம்களில் இருந்து தற்போதும் நிவாரணம் பெற்றுகொண்டு தமது உறவினர் வீடுகளில் சுமார் 3418 குடும்பத்தை சேர்ந்த 15, 462 பேர் உள்ளனர்.

இதன் மூலம் திருக்கோணமலை மாவட்டத்தில் சுமார் 8370 குடும்பங்களை சேர்ந்த சுமார் 34,685 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

ஆரம்பகாலத்தில் இருந்ததை விட அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே செல்கின்றது. இராணுவ கெடுபிடிகள் கிராமங்களில் இடம்பெறும் போது, மக்கள் அச்சம் காரணமாக அகதிகளாக இடம் பெயர்ந்து வருகின்றனர்

அகதிகள் முகாம்களில் இராணுவத்தினரும், தமிழ் குழுக்களும் அடிக்கடி தேடுதல் என்ற போர்வையில் இளைஞர்களையும் யுவதிகளையும் கைது செய்வதனால் அந்த அகதிகள் முகாமில் உள்ள மக்கள் நிம்மதி இழந்துள்ளனர்.

கைது செய்யப்படுபவர்களை பற்றிய விபரம் பெறுவதற்கு அவர்களின் உறவினர் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றார்கள் என்றும் அறிய முடிகின்றது.

## மட்டக்களப்பு கிராமங்களில்

# இராணுவத்தால் கைதான 37 தமிழரை காணவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த ஒக்டோபர் மாதம் 19ஆம், 20ஆம் திகதிகளில் மூன்று தமிழ்க்கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு 90க்குமேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் 53 பேர் விடுதலை செய்யப்பட்டார்கள். ஏனையவர்களைப் பற்றிய ஒரு விபரமும் அறிய முடியவில்லை என தமிழ் அரசியல்வாதி ஒருவர் இராணுவ அதிகாரிகளிடம் தெரிவிதத்துள்ளார்.

இராணுவ அதிகாரிமேற்கூறப்பட்ட திகதிகளில் தமிழ்க் கிராமங்கள் சுற்றி வளைக்கப் படவோ, இளைஞர்கள் கைது செய்யப்படவோஇல்லையென கைவிரித்துள்ளார். எனவே இவர்களின் பெற்றோர் இராணுவ முகாம்களில் இவர்களை பற்றிய விபரங்களை அறியும் பொருட்டு காத்திருக்கின்றனர்.

தமிழ் அரசியல் வாதியோ இந்த இராணுவ சுற்றிவளைப்பில் ஈடுபட்ட அணியை தனக்கு தெரியும் என்று கூறியுள்ளார். தேவையேற்பட்டால் தாம் விடுதலை ஆனவர்கள் மூலம் அதனை நிருபிக்க தயார் என்றார்.

இப்பிரச்சினை எழுந்துள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலிப் பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதல்

### போக்குவரத்து தடங்கல்

(யாழ்ப்பாணம்)

கிளாலிப் பகுதி நோக்கி சிறிலங்கா இராணுவம் கடந்த இரண்டு நாட்களாக எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றன.

நேற்றுமுன்தினம் இரவும் நேற்று இரவும் ஆனையிறவு, பூநகரி பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கிளாலி கரையோரப் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை நடாத்தினர். இதனால் கடந்த இரண்டு தினங்களாக கிளாலியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகவும் வெளியூர்களில் இருந்து குடா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய சமூகநாடுகள்

# அகதிகள் குறித்து பொதுக்கொள்கை டிசம்பரில் வகுக்கும்

[பொன்]

வெளிநாட்டு அகதிகளுக்கு தஞ்சம் அளிப்பது தொடர்பாக ஐரோப்பிய சமூக நாடுகளுக்கான பொதுவான கொள்கையொன்றை வகுப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் டிசம்பரில் ஐரோப்பிய சமூகத்தின் அடுத்த உச்சிமாநாடு இடம்பெறும் போது இப் பொதுக் கொள்கை தொடர்பாக பிரிட்டன் பிரேரணை ஒன்றை முன்வைக்கும் என்று ஜேர்மன் அரசாங்க வட்டாரங்கள் கூறியுள்ளன.

கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஸ்ட் ஆட்சிகள் அகன்றதன் பின்னர் அரசியல் ரீதியாக பிரஜைகள் அந்த நாடுகளில் தண்டிக்கப்படும்போக்கு வீழ்ச்சிகண்டிருப்பதாக மேற்கு நாடுகள் கருதுகின்றன. அதனால் அரசியல் ரீதியான தண்டனைகள் இடம்பெறாத நாடுகளின் பட்டியலொன்று யூ. என். எச். சி. ஆரின் உதவியுடன் தயாரிக்கப்படவுள்ளது.

இப் பொதுக் கொள்கையின் முக்கிய அம்சமாக வெளிநாட்டு அகதி ஒருவர் ஐரோப்பிய சமூகத்தின் உறுப்பு நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளுக்கு தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்ய முடியாது என்பது இடம்பெறவுள்ளது.

# கறுவாக்காடு யுகம் முடிவடைந்துவிட்டது

### - பிரேமதாசா

கறுவாக்காடு யுகம் முடிந்துவிட்டது என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கறுவாக்காட்டில் பிறந்து உயர் பதவி வகிப்போருடன் தொடர்புடைய

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று அமெரிக்க ஜனாதிபதிதேர்தல் பில்கிளிங்டன் முன்னணியில்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது.

இத்தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக பில் கிளிங்டனும் குடியரசுகட்சி வேட்பாளராக அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சும் சுயேட்சை வேடபாளராக ரோஸ் பெரோசும் போட்டியிடுகின்றனர்.

இறுதியாக சி.என் என் நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பில் பில்கிளிங்டனுக்கு 43 சதவீத வாக்குகளும் ஜோர்ஜ்புஷ்சிற்கு 36 சதவீதமும் ரோஸ் பெரோசிற்கு 15 சதவீத வாக்குகளும் கிடைத்துள்ளன.

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை எடுத்த அபிப்பிராய வாக்கெடுப்பிலும், ஏ. பி. சி செய்திச்சேவை எடுத்த அபிப்பிராய வாக்கெடுப்பிலும் பில் கிளிங்டனே முன்னணியில் உள்ளார்.

எனினும் போட்டி கடுமையானதாக இருக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## வரி விளம்பரம்

### மாணவருக்கான கையேடு

''பரீட்சைகளுக்கான ஆயத்தமும் அவற்றை வெற்றிகரமாக எதிர் கொள்ளலும்'' உளவியல் சஞ்சிகை தனிப் பிரதி ரூபா 12-00. தேவையானோர் பதினைந்து ரூபா முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். முகவரி ஜோ. எக்கட்டன் 1913, கொழும்புத் துறை வீதி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை— சுண்டிக்குளியில் பெற்றுக் கொள்ளலாம். (சி-5231)

### விற்பனைக்கு

தரமான தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. டில்கா வாச் வேக்ஸ் 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்)யாழ்ப்பாணம். (சி-5344)

### கடிகாரமா ? ரேடியோவா ?

உங்கள் கடிகாரங்கள் ரேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்)யாழ்ப்பாணம். (சி-5152)

### விற்பனைக்கு உண்டு

பிறவுண், கறுப்பு, வெள்ளை சேவல், பேட்டுக் குஞ்சுகள், புறொயலர் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகா பதி'' மார்க்கற் லேன்,மானிப்பாய். (3562)

### பற் சிகிச்சை நிலையம்

பற்சிகிச்சை நிலையம்,(கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு எதிரில்) கே. கே. எஸ். வீதி, கொக்குவில். தினசரி 4 பி. ப. —6 பி. ப. ஞாயிறு: 10 மு. ப. —2 பி. ப. (3216)

### பாம்புக்கடி மரணம் இலங்கை முதலிடம்

பாம்புக்கடியினால் மரணமடைவோர்தொகை இலங்கையிலேயே அதிகம் என்று புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.உலகிலேயேஇலங்கை இவ்விடயத்தில் முதலிடம் வகிப்பதாக பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் அலன் டீ சில்வா கூறியுள்ளார்

### மாதாந்த உதவிப் பணம்

## 2-ம் ஆண்டு நினைவு

மண்ணின் மடியில்
28. 02. 1975

மண்மீட்புப் பணியில்
03. 11. 1990



### வீரவேங்கை டில்லி
[தேவதாஸ் சாம்சன்]

இந்த மண்ணை மீட்பதற்கு
சொந்த வாழ்வைத் துறந்தவனே!
பதினைந்து ஆண்டுகால உன்வாழ்வு
புதிராகப் போனதுவோ!
அந்நியரை விரட்டிட நீ கொண்ட ஆவேசம்
இந்த மண்ணில் வாழும் வையம் உள்ளவரை
உன்நாமம்

- குடும்பத்தினர்

(3523)

## நன்றி நவிலல்



### சின்னத்தம்பி அருணாசலம்

வலி. கி. ப. நோ. கூ. சங்க
முன்னைநாள் முகாமையாளர்

தோற்றம்
18-0?-1915

மறைவு
28-09 1992

எங்கள் குடும்ப விளக்கு அணைந்த பொழுது இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களிற்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களிற்கும் இன்னும் பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த உறவினர்,நண்பர்களிற்கும் அத்துடன் 28 10. 1992இல் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொண்டு சிறப்பித்த உறவினர், நண்பர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

''அபிராமி மருந்தகம்',
நீர்வேலிச்சந்தி.

– குடும்பத்தினர்

(3567)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம்
14 — 08 — 1968



வீரச்சாவு
03 — 11 — 1990

### லெப். காஞ்சனா
(சறோஜினி கணபதிப்பிள்ளை)

கரையில்லாக் கல்வி கற்று
கழகம் செல்லும் வேளையிலே
களத்தினிலே போராடி
காவியம் படைத்தாயோ - காஞ்சனா
நீங்காது உன்நினைவு - எம்
நெஞ்சமதில் நிலைத்திருக்கும்.

காந்தி வீதி,
வல்வெட்டித்துறை.

- குடும்பத்தினர்
(3568)

## இரண்டாம் ஆண்டு நினைவாக....

# தேசம் விடிய விழி மூடிய வீரவேங்கை

தாய் மகிழ்ந்திட

1969
|
05
|
18



## நினைவு கூருகின்றோம் ...
### 1992-11-03

1986-ம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

★ **தம்பி** (கணபதிப்பிள்ளை ஜெயநதன் நாவற்குடா - மட்டக்களப்பு)

1987-ம் ஆண்டு பொன்னாலைப்பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப்.குட்டி** (மகாலிங்கம் ஜெயவர்த்தனா- ஜெயவர்த்தனா வீதி, நாயன்மார்கட்டு-யாழ்)

**2-ம் லெப்.சுகன்** (மாரிசக்திவேல் - வாமதேவபுரம், அடம்பன்-மன்னார்)

கொக்குவில் பகுதியில், இந்தியப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**றூபி** (மாரியம்மா-முதலியார்கமம், இலுப்பைக்கடவை- மன்னார்)

கோண்டாவில் பகுதியில் இந்தியப்படையினரின் எறி கணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சபரி** (கம்சா அத்துவிதானந்தன்- 214/5,திருநெல்வேலி தெற்கு-யாழ்)

மட்டக்களப்பு - கல்லடிப்பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

யாழ்ப்பாணம், உடுவில் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்து தமிழர்கள்.

1988-ம் ஆண்டு பாவற்கொடிச்சேனையில் இந்தியப் படை சுட்டதில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப்.ஜஸ்ரின்** (அந்தோனி ஆரோக்கியநாதன்-வீச்சுக் கல்முனை, புதூர் - மட்டக்களப்பு)

யாழ்ப்பாணம் - சரசாலைப்பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட - நாட்டுப்பற்றாளரான-

**சுந்தரம்**

1990-ம் ஆண்டு மாவிட்டபுரம் - தச்சன்காடு சிறிலங்காப்படையினரின் மினிமுகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

## மாதாந்த உதவிப் பணம்

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களுக்கான மாதாந்த உதவிப் பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

அவ்வப்பகுதி உப அரசாங்க அலுவலகங்களில் வைத்து வழங்கபட்டபோது எடுக்கத் தவறியவர்கள் அலுவலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்படுகிறது. (82)

## மகாவலி திட்டம் நன்மை தரவில்லை

சமனலவேவ நீர்த்தேக்க அணை உடைத்து நீர் வெளியேறுவதற்கான பொறுப்பை ஜப்பானே ஏற்க வேண்டும் என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பேசியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

சமனலவேவ நீர்த்தேக்க மற்றும் மின்திட்டத்தை ஜப்பானும், பிரித்தானியாவும் கூட்டாக உருவாக்கின என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இத்தகைய பாரிய திட்டங்கள் பெருமளவில் நட்டத்தையே தருகின்றன என்று லண்டனில் வெளியான அறிக்கை ஒன்று கூறுகின்றது. மின்திட்டங்களைப் பொறுத்தவரையில், இத்தகைய பாரிய திட்டங்களால் எதிர்பார்த்த அளவுக்கு நன்மைகள் கிடைப்பதில்லை என இவ்வறிக்கை தெரிவிக்கின்றது.

உலகிலேயே மிகப்பெரிய நீர்மின்சாரத் திட்டம் ஒன்றை அமைக்க கென்யா அரசு திட்டமிட்டுள்ளது என்றும், சிறிலங்கா மகாவலித் திட்டத்தால் பெரும் நன்மைகள் கிடைக்கவில்லை என்றும் இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

சமனலவேவ நீர்த்தேக்க அணை உடைப்புக் குறித்த விசாரணை மேற்கொள்ளது அரசு விசாரணைக் குழு ஒன்றை நியமித்துள்ளது.

---

18

தமிழ்மண் விடிந்திட

1990

11

03



# மேஜர்சஞ்சிகா (சுந்தரராஜன் கலைச்செல்வி)

கரவெட்டி கிழக்கு, கரவெட்டி

பூவைக்குள் உறங்கிய போர்க்குணம் - இந்தப்
புவியினில் புதுமைகள் சேர்த்தன
இனமான உணர்வுகள் எழுந்திட தனிநல ஆசைகள்
பறந்திட மறந்திட எழுந்தாள் கலைச்செல்வி
புயல் புலியாக.

எதிரியின் வேலியை உதைத்தாள் சிதைத்தாள்
களத்தினில் கனத்த சாதனை புரிந்து உடல்
சாய்ந்தாள் சஞ்சிகா மாவிட்டபுரத்திலே
ஆண்டுகள் இரண்டு போயின போகட்டும்
போகுமா இவளின் போர்க்குணம் புலிமுகம்?

- குடும்பத்தினர்

(சி-5345)

---

1990-ம் ஆண்டு மாவிட்டபுரம் - தச்சன்காடு சிறிலங்காப்படையினரின் மினிமுகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

**மேஜர் சஞ்சிகா** (சுந்தரராஜன் கலைச்செல்வி கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.)

**கப்டன் அருந்ததி** (சிவரஞ்சினி சண்முகநாதன்-54, அம்பாள் வீதி. நாயன்மார்கட்டு-யாழ்)

**லெப். காஞ்சனா** (சரோஜினி கணபதிப்பிள்ளை- காந்த வீதி, வல்வெட்டித்துறை-யாழ்)

**ராஜன்** (ஜோசப் ராஜேந்திரன் - பாடும் மீன் வீதி- மட்டக்களப்பு)

**லெப். மரிக்கார்** (செல்வமாணிக்கம் ரதீஸ்வரன் - பெரியகுளம், நெடுங்கேணி)

**2-ம் லெப். அன்றூ** (நாகமுத்து திரவியநாதன் - புன்னாலைக்கட்டுவன் தெற்கு- யாழ் )

**2-ம் லெப். ரோம்** (முத்துலிங்கம் கிருஸ்ணமூர்த்தி - பதுளை - கண்டி)

**சேகர்** (வித்தியானந்தன் அன்புக்குமரன் - இணுவில் கிழக்கு - யாழ். )

**ஈசன்** (சுப்பிரமணியம் சங்கர் - அரியாலை கிழக்கு - யாழ். )

**பாஞ்சாலன்** (சற்குணம்மாதவன் - கரணவாய்கிழக்கு, கரவெட்டி - யாழ். )

**கார்த்திக்** (சிதம்பரநாதன் கோணேஸ்வரன் - பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு - யாழ். )

**டில்லி** (தேவதாஸ் சாம்சன் - 335/4, 4-ம்கண்டம், வலதுகரை, கற்சிலைமடு )

**கீர்த்தி** (தம்பிப்பிள்ளை சங்கரன் - செங்கலடி- மட்டக்களப்பு )

சிறிலங்காப் படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**சுனில்** (அருமைநாயகம் - கோளாவில் அக்கரைப்பற்று-)

**ராஜன்** (கார்த்திகேசு ரவி- கஞ்சிகுடிச்சாறு - திருக்கோவில் )

கும்புறுப்பிட்டிப்பகுதியில் சிறிலங்காப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். கோணேஸ்** (தி. கோணேஸ்வரன்- நிலாவெளி- திருக்கோணமலை )

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5343)

### சிந்தனைக்கு

அநீதி, பொய்ச்சான்று, துரோகம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு நிலையான ஆட்சி ஆதிக்கத்தை எழுப்ப முடியாது.

- டெமாஸ் தெனிஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 03-11 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## உற்சாகமூட்டும் 'ரொனிக்' தேடும் பிரதமர்

வடக்கு - கிழக்கிலுள்ள இராணுவத் தளங்களுக்கு சிறிலங்காப் பிரதமரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி, பி. விஜயதுங்காவும் கூட்டுப்படை நடவடிக்கை தலைமைத்தள கர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவும் பல சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் சூறாவளிப் பயணங்களை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, வடக்கு - கிழக்கில் போரில் ஈடுபட்டுள்ள சிங்கள இராணுவத்தினரின் நலன்களைக் கவனிக்கவென விசேட உயர் மட்டக்குழு ஒன்றும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவால் நியமிக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராகவும் டி.பி. விஜயதுங்காவே செயற்படவுள்ளார்,

இந் நிலையில், படை முகாம்களுக்கு திரு. டி. பி. விஜயதுங்கா மேற்கொள்ளும் சூறாவளிப் பயணங்கள் மிகவும் மனந்தளர்ந்து போயுள்ள சிங்கள இராணுவத்திற்கு உற்சாக மூட்டவும், இராணுவத்திலிருந்து தப்பி ஓடுபவர்களை தடுத்து நிறுத்தவும் அரசாங்கம் மேற்கொள்ளும் பகீரத முயற்சியின் ஒரு பகுதி என்றே கொள்ளலாம்.

சிறிலங்கா அரசாங்கத்தின் இவ் உற்சாகமூட்டும் நடவடிக்கைகளை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வானொலி, தொலைக்காட்சி செய்தி அறிக்கைகள் தெளிவாகக் காட்டுகின்றன. பலாலி கர்ரைநகர் படைத் தளங்களுக்கு விஜயம் செய்த பிரதமர் டி. பி. விஜயதுங்கா இராணுவச் சிப்பாய்கள் மத்தியில் பேசுகையில். அரசாங்கம் கோடிக்கணக்கான செலவீட்டில் இராணுவத்தினருக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் மேற்கொண்டு வரும் சமூக நலத் திட்டங்களை அறிவித்தார். படையிருக்கான பொருள் விநியோகத்திலுள்ள தடங்கல் உடன் நீக்கப்படும் என்றார்.

இதேவேளை, மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட திரு. டி பி. விஜயதுங்கா ஒவ்வொரு படையினராக குசலம் விசாரித்து முதுகில் தட்டிக் கொடுத்ததோடு, இராணுவத்தினரின் சமையல் பகுதி வரை சென்று, விநியோகிக்

# தமிழகத்தில் சுப்பிரமணியம் சுவாமி

# ஜெயலலிதா அரசுக்கு தலைவலி

தமிழகத்தில் ஜெயலலிதா அரசுக்கு சங்கடத்தையும் தலையிடியையும் ஏற்படுத்தியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தமிழகத்தில் முகாமிட்டுள்ளார். சட்ட சபையில் அசுர பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றிய ஜெயலலிதாவின் அடாவடித்தனமான போக்கும், அராஜக ஆட்சியும் ஒரு பக்கம் நீடித்து வரும் அதே வேளை ஜெயலலிதா மீதும், அவரது ஆட்சியின் மீதும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் ஜெயலலிதா அரசைப் பதவி நீக்க வேண்டும் என்று கோரி அதற்காக ஒரு முன்னணி அமைக்கப்பட்டு பிரசார வேலைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதோடு, ஜெயலலிதா அரசைப் பதவி நீக்கம் செய்யா விட்டால் சட்டத்தின் துணையை நாடப் போவதாக டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி எச்சரித்துள்ளார்.

யார் இந்த சுப்பிரமணியம் சுவாமிஎன்று கேள்வி எழுவது இங்கு இயல்பானதே இந்திய பாராளுமன்றத்தின் மேல் சபையான ராஜ்ய சபாவின் உறுப்பினர் என்பதோ, வி.பி. சிங் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தவர் என்பதோ அவரை இனங்காட்டப்போதுமானதல்ல. ஜே.ஆர் - ராஜீவ் உடன்பாட்டிற்கு முற்பட்ட காலத்தில் ஈழத் தமிழ் மக்களின் ஆபத்பாந்தவர் போல அறிக்கைகள் வெளியிட்டு வந்தவர் என்பதும், அண்மையில் தலைவர் பிரபாகரனைக் கைது செய்ய இந்தியத் துருப்புக்களை அனுப்ப வேண்டும் (முன்னர் ஒன்றரை இலட்சம் துருப்புக்களை இரண்டரை வருட முயற்சிக்குப் பின்னர் வெறுங்கையைப் பிசைந்து கொண்டு போனதை மறந்து போய்) என்று புது ஆலோசனை வழங்கியவர் என்பதும், அவரது எண்ணவோட்டத்தை எதிரொலிக்கப் போதுமானதல்ல ''இந்தஆளு யாரையா? முட்டாள்ரகத்திலயும் சேர்க்க முடியாத புத்திசாலின்னு ஒத்துக்க முடியாத மனுசரய்யா அந்த ஆளு'' என்பது சுப்பிரமணியம் சுவாமி பற்றி பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸின்கணிப்பீடு. ''எதிர்காலத்தில் இந்தியப் பிரதமராக வர வேணும் என்று பகல் கனவு காணும் அரசியல் கோமாளி'' என்பது சுவாமி பற்றிய ஜெயலலிதாவின் கருத்து.

அரசியலில் எப்போதும் வெறும் வாய்மெல்லும் வீராப்புப் பேச்சும், ''கருணாநிதி ஆட்சியைக் கவிழ்த்ததும் நானே; அஜித் சிங்கையும் அவருடன் சேர்ந்த இருபது பாராளுமன்ற உறுப்பினர்

படியே தமிழகத்தில் தற்போது கடை விரித்துள்ளார் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி. டாக்டர் சுவாமியின் செயல்களுக்கு பிரதமர் நரசிம்மராவின் பச்சை விளக்கு சமிக்ஞை இருக்கிறது என்றும் தமிழக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

### சுவாமியின் வலையில்

ஜெயலலிதா தனது உயிர் மேல் இருக்கும் ஆசை காரணமாக விடுதலைப் புலிகளோடு இரகசியத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகவும், இதன் மூலம் தமிழகக் கரைகளிலிருந்து பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்கள் விநியோகிக்கப்படுவதாகவும் புரளி கிளப்பியபடி புதுடில்லியில் இருந்து பறந்து வந்த சுவாமி முகாமிட்டார். இனியும் ஜெயலலிதாவை விட்டு வைத்தால் தமிழ்நாடு தாங்காது என்ற அறிவிப்போடும், அக்டோபர் இரண்டு முதல் ஜெயலலிதா அரசை தீவிர பிரச்சாரம் செய்யப்போவதான முழக்கத்தோடும் சுவாமியின் கடை விரிக்கப்பட்டது. தமிழகத்தில் மூன்றாவது அணியொன்றை உருவாக்குவது என்றும், இந்த அணியில் ஜெயலலிதா இல்லாத அ. இ. அ. தி. மு. க. வினரும், கருணாநிதி இல்லாத தி. மு. கவினரும். மரியாதையை விரும்பும் காங்கிரஸ்காரரும் சேர்த்துக்கொள்ளப்படலாம் என்றும் சுவாமியின் திட்டம் தயாரானது. இதே வேளை தமிழகத்தில் காவல் துறையின் கடுமையான கட்டுப்பாடுகளையும் மீறி இலங்கைத் தீவிரவாதிகள் ஊடுருவி இருப்பதாகவும் அவர்களிடம் பயிற்சி பெற்றவர்களும், ஆதரவாளர்களும் தமிழகத்தில் ஒளிந்து கொண்டிருப்பதாக தமிழக காவல்துறை ஆணையாளர் வால்டர் தேவாரம் தெரிவித்திருந்தார் இதைப் பற்றிப் பிடித்துக் கொண்ட சுவாமி தமிழகத்தில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து விட்டதாக மாநில அரசின் மீது குற்றம் சுமத்தினார்.

ஜெயலலிதாவுக்கும் புலிகளுக்கும் இடையிலான தொடர்பு பற்றி சுவாமி கிளம்பிய புரளி தமிழகத்தில் சலசலப்பை உண்டுபண்ணியது. சுவாமியின் கூற்று ஆதாரமற்றது என்று கூறி நிராகரித்து

என்று கருதப்படுபவருமான வாழப்பாடி இராமமூர்த்தி சந்தேகம் வெளியிட்டார். தி. மு. கவும், அதன் பங்கிற்கு சுவாமியோடு ஒத்து ஊதியது ஜெயலலிதா புலிகளுக்கு தூது விட்டிருக்கக் கூடும் என்றும் அதன் சாத்தியப்பாட்டை நிராகரிக்க முடியாது என்றும் சொல்லி வைத்தது.

இதே வேளையில் மதுரை மாநாட்டில் அ. இ அ. தி மு. கவின் அபார வெற்றி குறித்து ஜெயலலிதாவின் வீரப்பிரதாபம் காங்கிரஸ் வட்டாரங்களில் எதிர்ப்பு அலைகளை எழுப்பியது. இந்திரா காங்கிரஸ் கட்சியின் மனித உழைப்பும் பண பலமும் தான் ஜெயலலிதாவை முதல்வராக்கியது என்று இரா. அன்பரசு தெரிவிக்க காங்கிரஸ்-ஜெயலலிதா தேனிலவில் ஊடல் தோன்றியது.

ஆறு அல்லது ஏழு பேரைக் கொண்டதாக ஜெயலலிதா அரசைபதவி விலக்கக் கோரும் நடவடிக்கைக்குழு அமைப்பதற்கு சுவாமி திட்டம் வகுத்த போது அ. இ அ. தி. மு. க. வில் இருக்கும் ஜெயலலிதா அதிருப்தியாளர்களின் நேசக்கரம் கிட்டியது இந்த வகையில் முன்னாள் அமைச்சர்களான க இராசாராம், திருநாவுக்கரசு போன்றோர் சுவாமிக்கு தமதுஆதரவை வெளிப்படையாகவே தெரிவித்தனர். ஆர். எம். வீரப்பன் உட்பட மேலும் முன்னாள் ஜானகி அணியினரின் ஆதரவும் சுவாமிக்கு கிடைக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவைதவிர ஜெயலலிதாவின் உயிர்த்தோழி என்று வர்ணிக்கப்படும் சசிகலாவின் கணவரும் ஜெயலலிதாவின் முன்னாள் உதவியாளரும், தமிழக அரசின் முன்னாள் அதிகாரியுமான நடராசன், சுவாமியின் செயல்களுக்கு உடைந்தையாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. (நடராசனால் வெளியிடப்படும் 'தமிழ் அரசி' இதழின் சார்பாக வாசகர் கூட்டங்கள் நடத்த மாவட்ட வாரியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டது. சில மாவட்டங்களில் நடந்த இச்கூட்டங்கள் ஜெயலலிதா அரசிற்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்திய நிலையில் குடந்தையிலும் பிற இடங்களிலும் வாசகர் கூட்டம் நடப்பதை பொலிசார் தலையிட்டுத் தடுத்து வருகிறார்கள்.) சசிகலா

சாக வளர முற்படுவதையோ ஜெயலலிதா விரும்பவில்லை. ஆனால் தமிழக அரசின் அதிகார பீடங்களில் அமர்ந்திருக்கும் சசிகலா, மற்றும் நடராஜனின் உறவினர்கள் யாராவது ஒருவர் அரசியலில் ஈடுபடுவதற்கு ஜெயலலிதா ஆதரவு காட்டவேண்டும் என்றும், இல்லாவிட்டால் சசிகலா தொடர்ந்தும் ஜெயலலிதாவோடு 'போய்ஸ் கார்டனில்' தங்கியிருப்பதில் அர்த்தம் எதுவுமில்லை என்றும் கருதுவதாகக் கூறப்படுகின்றது, சசிகலாவின் நெருங்கிய உறவினரான விநோதகன் தஞ்சை மாவட்டம் திருந்துறைபூண்டியில் ஏ சி. வசதிகளோடு கட்டியிருக்கும் திருமண மண்டபத்தை திறந்துவைக்க ஜெயலலிதா மறுப்புத் தெரிவித்த பிறகு, 'இனியும் சசிக்குப் போய்ஸ் தோட்டத்தில் என்ன வேலை'' என்று அவர்கள் கேட்கின்றனராம். இதனால் திருமதி சசிகலா இருதலைக் கொள்ளி நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறாராம்.

ஆனால் சசிகலா ''போய்ஸ் கார்டனில்'' ''சின்ன மேடமாக'' தங்கிஇருக்கும் வரையில் நடராசனைப் பகைக்கவும் முடியாமல், நடராசனோடு நட்புறவு பாராட்டவும் முடியாமல் அ. இ. அ. தி. மு. க. சட்ட மன்ற உறுப்பினர்கள் பலரும் மௌனித்துப் போயுள்ளனர். இதே வேளை பி. எச். பாண்டியன் போன்ற அதிருப்தியுற்றிருக்கும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஜெயலலிதா அரசின் அதிகார துஷ்பிரயோகம், மற்றும் ஊழல்கள் போன்ற விடயங்களில் பல பயனுள்ள தகவல்களை நடராஜன் தாமாகவே கடிதமூலம் அனுப்பி வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

### சுவாமியின் வெற்றிகள்

இத்தகைய சூழலில் தான் கடந்த ஆகஸ்ட் மாதத்தின் இறுதிவாரத்தில் ஜெயலலிதா முதல்வர் பதவியை துறந்துவிடுவதாகதமிழக ஆளுநருக்கு கடிதம் எழுதினார். அதன் பின்னர் புதுடில்லிக்கு பறந்து சென்ற ஜெயலலிதாவுக்கும், பிரதமர் நரசிம்மராவுக்கும் இடையில்நடந்த பேச்சுக்களை யடுத்து ஜெயலலிதாவின்பதவி துறப்பு நாடகம் பாதியிலேயே

டுமே முடியும் என்று கூறி அவரது வெற்றிக்காகப் பாடுபட்டு வந்த சுப்பிரமணியம் சுவாமியிடம் பிரசாரம் செய்வதன் மூலம் ஜெயலலிதாவின் ஆட்சியைக் கவிழ்க்க முடியுமா என்று கேட்டபோது அவர் ''ஜெயலலிதாவைப் பற்றி நான் அறிவேன். தனக்கு எதிர்ப்பு வருகிறது என்றால் ஓசைப்படாமல் ஓடிவிடுவார்'' என்று பதிலளித்திருப்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இதே வேளை தி. மு க. வும், ஜெயலலிதாவும் அவரது அமைச்சர்அவைச் சகாக்களும் அரச அதிகாரிகளும் கூட இருநூறு கோடி ரூபாவுக்கு மேல் ஊழல் புரிந்திருப்பதாகக் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளது. அத்துடன் ஜெயலலிதா பெருமளவில் பங்குகளைக் கொண்டிருக்கும் ''ஜெயா பப்ளிக்கேசன்'' நிறுவனத்திற்காக நிலம் கொள்முதல் செய்யப்பட்டதிலும், தமிழ்நாடு சிறு கைத்தொழில் அதிகார சபையான ''டான்ஸி'' நிறுவனம் சம்பந்தப்பட்ட ஊழலிலும் ஜெயலலிதா நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதாக கூறி அவர் மீது வழக்குத் தொடர்வதற்கு ஆளுநரின் அனுமதியைக் கோரியுள்ளது. மேலும் ஜெயலலிதா அரசைப் பதவி விலக்கக் கோரும் பிரசாரத்தையும் அக்கட்சி முடுக்கி விட்டுள்ளது.

எனினும் சுப்பிரமணியம் சுவாமி கிளப்பிய புரளிக்கு அஞ்சி ஜெயலலிதா செப்டம்பர் ஆறில் புறப்படுவதாக திட்டமிட்ட தனது வெளிநாட்டுப் பயணத் திட்டத்தை கைவிட்டதும், அ. இ. அ. தி. மு. க. வில் இருக்கும் ஜெயலலிதாவின் மீது அதிருப்தி கொண்ட சிலர் சுவாமியோடு தம்மைப் பகிரங்கமாக இனங்காட்டத் தொடங்கியிருப்பதும், தி மு.க. போன்ற கட்சிகளும் ஜெயலலிதா எதிர்ப்பு பிரசாரத்தில் தீவிரமாகியிருப்பதும் சுவாமிக்கு கிடைத்த வெற்றிகள் என்றே கொள்ளப்படலாம். சுப்பிரமணியம் சுவாமி ஜெயலலிதா ஆட்சியைக் கவிழ்க்கும் தனது திட்டத்தில் எந்தளவுக்கு வெற்றியீட்டுவார் என்பது தெளிவாக இல்லாத போதும் தமிழக அரசியலில் சலசலப்பை ஏற்படுத்த அவர்தவறவில்லை

கில் தட்டிக் கொடுத்ததோடு, இராணுவத்தின ரின் சமையல் பகுதி வரை சென்று, விநியோகிக் கப் படும் பொருள்களின் தரம் பற்றிப் பரிசோத னையும் செய்தார்.

இவ்வாறாகவெல்லாம் அமைச்சர் படைத் தளங்களுக்கு சென்று உற்சாகம் ஊட்ட வேண் டிய அவசியம் எழும் என போரைத் தொடங்கிய வேளை சிங்கள அரசியல் தலைவர்கள் கனவிலும் எண்ணியிருக்க மாட்டார்கள். தாங்கள் கொழும் பில் கால் ஆற இருக்க 'சிங்கங்கள்' போரில் வென்று வரும் என்றே அவர்கள் எண்ணிக்கொண் டிருந்தார்கள். ஆனால், நிலைமை மாறியதால் அமைச்சர்களும் 'கால் நோக' நடக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

ஆனால், இன்றைய நிலையில் அமைச்சரி னால் இதைத் தவிர்க்க முடியாது ஏனெனில் சிங் கள இராணுவத்தினர் அந்தளவிற்கு விரக்தியின் விளிம்பிற்கு தள்ளப்பட்டுள்ளனர். தளபதிகளின் பேச்சுக்களில் அவர்கள் நம்பிக்கை இழந்து விட்ட னர். இராணுவத்தில் இருந்து ஆயிரக்கணக்கா னோர் தப்பி ஓடியுள்ளனர்.

அண்மையில் அம்பாறைப் பகுதியில் இடம் பெற்ற சம்பவம் ஒன்று படையினரின் மன விரக் தியை வெளிக்காட்ட சிறந்த தொரு எடுத்துக் காட்டாகும். லீவில் சென்ற அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவர் முகாம் திரும்பாமையால் அவ ரைத் தேடிச் சென்ற பொலிஸ் அதிகாரியை சுட் டுச் கொன்றதோடு, தன்னைத் தானே சுட்டும் தற்கொலை செய்து கொண்டார். அதாவது சிப் பாய்களின் மனத்தளர்ச்சி தற்கொலை செய்யும் ளவிற்குச் சென்றுள்ளது.

இந் நிலையில், தமிழருக்கு எதிரான போரின் மூலமே தமது அரசியலை நடத்தும் அரசாங்கம் போரை ஊக்குவிக்கவும் தொடர்ந்து நடத்தவும் தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொள் வதில் தீவிர அக்கறை கொண்டுள்ளது. அத்தோடு நிலைமை இன்னும் மோசமடையுமாயின் இதை விடவும் அவர்கள் இராணுவத்தினருக்கு மேலும் சலுகைகள் வழங்கவும்தாமதிக்கமாட்டார்கள்.

இதேவேளை, இவ் விவகாரம் பாதுகாப்பு இரா ஜாங்க அமைச்சரை நேரடியாகப் பாதிப்பதினால் பதவிவிலகுமாறு சிலரிடமிருந்து கோரிக்கைகள் எழுந்துள்ள நிலையில் - திரு. டி. பி விஜயதுங்கா -படையினருக்கு உற்சாகமூட்ட குசினி வரை செல்வது ஆச்சரியப்படக்கூடியதொன்றல்ல.

---

பாராளுமன்ற உறுப்பினர் களை ஜனதா தளத்திலிருந்து கழற்றி எடுத்ததும் நானே;'' என்பதுபோன்ற தனது சாத னைப் பட்டியல்களை நீட்டிய

சுவாமியின் கூற்று ஆதாரமற் றது என்று கூறி நிராகரித்து விடமுடியாது என்று தமிழக காங்கிரஸ் தலைவரும், ஜெய லலிதாவின் ஆதரவாளர்

த்து வருகிறார்கள்.) சசிகலா வின் குடும்பத்தினர் எவரும் அ. தி. மு. க. அரசியலில் நேர டியாக அடியெடுத்து வைப்ப தையோ, அதன்மூலம் வாரி

துறப்பு நாடகம் பாதியிலேயே முடிந்து விட்டது.

ஒரு ஆண்டுக்கு முன்னர் தமிழ்நாட்டுக்கு விமோசனம் தர ஜெயலலிதாவினால் மட்

ஏற்படுத்த அவர்தவறவில்லை என்று துணிந்து கூறலாம் -

(தமிழக சஞ்சிகைகளிலிருந்து தொகுக்கப்பட்டது.)

---

# சதாம் ஹுசைனை பதவிவிலக்க எதிர்க்கட்சிகள் முயற்சி

(பக்தாத்)

யார் ஜனாதிபதியாவது என்பது முக்கியமல்ல. ஜனாதி பதி ஷியா முஸ்லிமாகவோ, சுனி முஸ்லிமாகவோ, துர் கோமனாகவோ, குர்திஷ்காரர் ஆகவோ இருக்கலாம் ஆனால் சதாம் ஹுசைனைத் தூக்கி எறியவேண்டும் அதன் பின் னர் நடைபெறும் சமாதான தேர்தல் ஒன்றின் மூலம் மக் கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யட்டும். இவ்வாறு ஈராக்கிய எதிர்கட்சித் தலை வர் ஒருவர் கூறியுள்ளார்.

முதன் முறையாக கூடிப் பேசியிருக்கும் ஈராக்கின் பல் வேறு கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் சதாம் ஹுசை னைப் பதவியிறக்க பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின் றனர்.

ஈராக்கை சர்வாதிகாரத்தி லிருந்து விடுவிக்கப் போவதா கக் கூறிவரும் குர்திஷ் ஜன நாயகக்கட்சித் தலைவர் மசூத் பார்சானி மேலும் கூறு கையில்; சதாம் ஹுசைனைப் பதவியிறக்குவதன் மூலமாக மட்டுமே ஈராக்கைப் பாதுகா க்கமுடியும் எனவும் தெரிவித் துள்ளார்.

## சிம்பாபேயில் எயிட்ஸ்; 40,000 பேர் பாதிப்பு

சிம்பாபேயில் நாற்பதினா யிரத்துக்கும் அதிகமாக எயிட்ஸ்நோயாளர்கள் இருப்ப தாகக் கண்டுபிடிக்கப்பட்டுள் ளது.

2000 ஆவது ஆண்டை நெருங்கும்போது சிம்பாபே மக்களில் 5,00,000 பேர் எயிட்ஸ் நோயினால் பாதிக் கப்படுவர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

மருத்துவ மனைகளில் இந் நோயினால் பீடிக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட 14,032 பேர் உள்ளனர். இவற்றை விட இந்நோயினால் பீடிக்கப் பட்ட எண்ணற்றோர் மருத் துவ மனைகளுக்குச் சிகிச்சை பெற சமுகமளிப்பதில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ராணுவத்தின்கட்டுப்பாட்டில் அங்கோலா தலைநகர்

(லுவாண்டா)

அங்கோலாவில் தலைநகர் லுவாண்டாவில் யூனிட்டா இயக்கத்தினரோடு புதிதாக மூண்ட கடும் சண்டைக்குப் பின்னர் அரசாங்கத் துருப்புக் கள் தலைநகர் லுவாண்டா வின் பெரும் பகுதியில் தாது கட்டுப்பாட்டை நிலை நிறுத் தியுள்ளது

மாகாண நகரான குவான்போவில் இருக்கும் யூனிட்டாவின் தலைவர் ஜோனாஸ் சிவிம்பியின் இல் லம் நோக்கி இப்போது அரசுத் துருப்புக்கள் நகர்ந்து கொண் டுள்ளன.

இதேவேளை லுவாண்டா தலைநகரில் இருக்கும் சர்வ தேச விமான நிலையம் மூடப் பட்டு தொலைத்தொடர்பு கட்டடத்திற்கு தீவைக்கப் பட்டதையடுத்து உள்ளூர் தக வல் தொடர்புகள் சீர் குலை ந்து போயுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

## கூட்டு ஒத்திகையை நிறுத்துக

(டில்லி)

அமெரிக்க - தென்கொரிய கூட்டு இராணுவப் பயிற்சியை நிறுத்திடுமாறு வட கொரிய அரசு தென் கொரியாவைக் கேட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நடவடிக்கை கள் உடனடியாக நிறுத்தப் படாவிட்டால் வரும் வியாழக் கிழமை ஆரம்பிக்க இருக்கும் வட -தென்கொரிய நாடுகளுக் கிடையிலான முதலாவது சம ரசக் கூட்டத்தில்வடகொரியா பங்கு கொள்ளாது என்று அந் நாட்டின் பிரதமர் கூறியிருக் கிறார்.

## அமெரிக்க ஜனாதிபதியாக யார் வந்தாலென்ன?

– ஒடெய் சதாம்

(பாக்தாத்)

அமெரிக்காவின் ஜனாதிபதி யாக எவர் வந்தாலும் எந்த மாற்றமும்இடம்பெறப் போவ தில்லை என ஈராக்கிய தலை வர் சதாம் ஹுசைனின் புதல்வன் ஒடெய் சதாம் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

சதாம் ஹுசைனின் தலை மைத்துவத்தையிட்டு அமெரிக் கத் தலைவர்கள் அனைவரும் ஒரே கருத்தைத்தான் கொண் டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஈராக் மக்கள் தமது தலை வர் சதாம் ஹுசைன் தான் என்பதனை ஏற்றுக் கொண் டுள்ளனர் எனவும் பாவில் என்ற பத்திரிகையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகையில் வெளி யாகியுள்ள ஒரு கட்டுரையில் ஜோர்ஜ்புஷ்பில்கிளின்டனிடம் தோல்வி அடையட்டும் என வும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அயோத்தியா கரசேவை

## விஷ்வ இந்து பரிஷத் முடிவுக்கு ஜோதிபாசு கண்டனம்

(டில்லி)

அயோத்தியாவில் மீண்டும் கரசேவைப் பணிகளைத்துவக் கப்போவதாக விஷ்வ இந்து பரிஷத் அறிவித்திருப்பதற்கு மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு கண்டனம் தெரி வித்துள்ளார்.

கல்கத்தாவில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற பேரணி யொன்றின் முடிவில் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்; இப் பிரச்சினை பேச்சுவார் த்தை மூலம் தீர்க்கப்படவேண் டும் என்றும், அதில் இணக் கப்பாடு காணாவிடில் நீதிமன் றத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும்கேட்டுக் கொண்டார்.

இதேவேளை பாரதீய ஜன தாக் கட்சி அயோத்தியா பிரச்சினையை தனது அரசியல் ஆதாயம் கருதி பயன்படுத்தி வருவதாக முன்னாள் துணைப் பிரதமரும் சமாஜவாதி ஜன தாக் கட்சியைச் சேர்ந்தவரு மான தேவிலால் குற்றம் சாட்டியுள்ளார். அவர்மேலும் கூறுகையில்; இப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொறுப்பு மதத் தலைவர்களிடம் விடப்பட வேண்டும் என்றும் அதில் அரசியல் குறுக்கீடுகளுக்கு இடமளிக்கக் கூடாதென்றும் கேட்டுக்கொண்டார்.

ஈழநாதம்

# ஜே. வி. பி. இயக்கம் புத்துயிர் பெறுகிறதாம்

(கொழும்பு)

ஜே. வி. பி. இயக்கம் தன்னை மீண்டும் புதுப்பித்துக் கொண்டு நடவடிக்கையில் ஈடுபட முற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை, ஜே. வி. பியினரின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி எதிர் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் தலைமையகத்திலிருந்து சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜே வி. பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க லண்டனில் இருந்து தனது தலைமை அலுவலகத்தை தென்னிந்தியாவுக்கு மாற்றி உள்ளாரென்றும் கொள்கைகளை நடாத்தி தனது இயக்கத்துக்கு நிதிதிரட்டும்படி கட்டளையிட்டுள்ளாரெனவும் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பல ஜே. வி. பி. உறுப்பினர்கள் தமிழ்ப் பெயர்களைப் பதிந்து தென்னிந்தியாவுக்கு தப்பியோடி, அங்குள்ள அகதி முகாம்களில் தங்கி இருக்கின்றனரெனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்

## போரூட் நிறுவனத்திற்கு கப்பல் மூலம் பொருள்கள்

(வடமராட்சி)

வடமராட்சி போரூட் நிறுவனத்திற்கு 800 விவசாயிகளுக்கான உரவகைகள், மருந்து வகைகள் நீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகள் மண்வெட்டிகள் ஆகியவை கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளன.

மேலும் மீனவர்களுக்கான வலைகள் இடம்பெயர்ந்த அகதிகளுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கான பாத்திரங்கள் மற்றும் தையல் இயந்திரங்களும் அலுவலகத்திற்கு தேவையான உபகரணங்களும் வந்து சேர்ந்துள்ளன. [82]

## யாழ். மாநகர எல்லைக்குள் வீதிவிளக்கு பொருத்தப்படும்

[மானிப்பாய்]

இரவு வேளையில் பயணம் செய்யும் பொதுமக்களின் அசௌகரியங்களைக் குறைக்கும் முகமாக யாழ். மாநகரசபை எல்லையின் முக்கிய சந்திகளில் வீதி வெளிச்ச விளக்குகள் இன்னும் இருவார காலங்களில் அமைக்கப்பட உள்ளன.

இவ்வீதி வெளிச்ச நடவடிக்கையானது புனர்வாழ்வு அமைச்சு, அத்தியாவசிய சேவைகள் நாயகத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இத்திட்டத்திற்குத் தேவையான நிதியை பெற்றுக் கொள்வதற்கு யாழ். செயலக அதிகாரிகள் முயற்சி எடுத்து வருகின்றார்கள்.

இத்திட்டம் பற்றி பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் இரட்ணசிங்கம் தெரிவிக்கையில் முதல் கட்டமாக 50 விளக்குகள் எரிய விடப்படும் எனவும்நிதியானது விரைவாக பெற்றுக் கொள்ளப்படின் இவ்வருட இறுதிக்கு 250 விளக்குகள் எரிய விடப்படும் எனவும் கூறினார். இவ்வெளிச்ச விளக்கு இரவு 10 மணிவரை எரியவிடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (07)

## முகாமைத்துவ கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தரம் இரண்டு அதிபர்களுக்கான முகாமைத்துவக் கருத்தரங்கு யாழ். கல்வித்திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் வரும் 6, 7, 8, 9 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதுவரை கருத்தரங்கில் பங்குபற்றாத தரம் இரண்டு அதிபர்களும், தரம் இரண்டு அதிபர் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றியவர்களும் இக் கருத்தரங்கில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## அடுத்த ஆண்டுக்கான பாடசாலை தவணைகள் அறிவிப்பு

(கொழும்பு)

1993க்கான பாடசாலைத் தவணை அட்டவணை உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது தமிழ்ப் பாடசாலைகளுக்கான தவணை நாள்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

முதலாம் தவணை ஜனவரி 4 முதல் ஏப்ரல் 7-ம் திகதி வரை இரண்டாம் தவணை மே 3 முதல் ஜூலை 30-ம் திகதி வரை மூன்றாம் தவணை செப்டெம்பர் முதலாம் திகதி முதல் டிசம்பர் 3-ம்திகதி வரை

குறைந்தபட்சம் 190 நாள்கள் பாடசாலைகள் நடத்தப்படவேண்டும் ஏதேனும் விசேட காரணங்களையிட்டுப் பாடசாலைகளை மூடுவதற்குரிய நிலைமை ஏற்படின் சனிக்கிழமை குறை நாள்கள் பாடசாலை நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீட்டுத்தோட்டப் போட்டி

கடந்த வருடம் போன்று இவ் வருடமும் மாநகராட்சி மன்றம் ''யுனிசெவ்'' உதவியுடன் வீட்டுத் தோட்டப் போட்டி நடாத்தவுள்ளது.

மாநகராட்சி மன்றப் பிரதேசத்தில் வாழும் யாவரும் இப்போட்டியில் பங்கு பற்றலாம். பங்குபற்றுபவர்களுக்குச் சில விதை வகைகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

போட்டிக்கான நிபந்தனைகளையும், விபரங்களையும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அமைந்துள்ள ''யுனிசெவ்'' பகுதியுடன் தொடர்பு கொண்டு அறியுமாறு யாழ். சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

போட்டிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி இம் மாதம் ஆறாம் திகதி ஆகும். (07)

## ஆசிரியர் நேர்முகப் பரீட்சை பிற்போடக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஆரம்ப ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்படடோருக்கான நேர்முகப் பரீட்சைக்கான தினத்தை பிற்போடுமாறு யாழ். பிராந்திய கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரைக் கேட்டுள்ளார்.

மேற்படி பதவிக்கான நேர்முகப் பரீட்சையன்றே வடபகுதி விண்ணப்பதாரிகளுக்கான தெரிவுப் பட்டியல் கிடைத்தது.

இதனால் இவர்கள் குறிப்பிட்ட தினத்தில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றவில்லை இதனைச் சுட்டிக்காட்டியே கல்விப்பணிப்பாளர் வானொலித் தொடர்பு சாதனமூடாக உடனடியாக இச் செய்தியை அனுப்பியுள்ளார்.

# அகதிகள் வருகையைத் தடுக்க பிரிட்டனில் புதிய சட்டம்

(லண்டன்)

பிரிட்டனில் அகதி அந்தஸ்து கோரும் வெளிநாட்டவர் பற்றிய விதிமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் புதிய மசோதா கமன்ஸ் சபையில் நேற்று இரண்டாவது தடவையாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த ஏப்பிரல் மாதத்தில் பிரிட்டனில் பொதுத்தேர்தலுக்கு முன் சபையில் முதன் முதலாகத் தாக்கல் செய்யப்பட்ட இந்த மசோதா நேரம் போதாத காரணத்தால் வாபஸ் பெறப்பட்டது.

இப்போது ஒருசில திருத்தங்களோடு கொண்டு வரப்படும் இந்தச் சட்ட ஆக்கத்திற்கு பிரிட்டனில் கடுமையான எதிர்ப்பு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அகதிகள் உரிமைகளுக்காக பிரசாரம் செய்யும் ஒரு மனித நேய நிறுவனம் கமன்ஸ் சபை வாசலில் நேற்றுப் பிற்பகல் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

பிரிட்டனில் புகலிடம் கோரி வருபவர்களின் தொகை கடந்த நான்கு வருடங்களில் பத்து மடங்காக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. ஆண்டொன்றிற்கு 5000 ஆக வந்து கொண்டிருந்த அகதிகளின் எண்ணிக்கை ஆண்டொன்றிற்கு 50,000 ஆக அதிகரித்துள்ளது.

இவர்கள் சட்டப்படி அகதிகள் அந்தஸ்துப் பெறத் தகுதி அற்றவர்கள். 'பொருளாதார அகதிகள்' என்று இங்கிலாந்து அரசு கருதுகிறது.

புதிய சட்டம் குறித்துப் பலர் கண்டனம் தெரிவித்துள்ளது காரணமாக இந்தப்புதிய மசோதாவில் அகதிகள் மேன்முறையீடு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேன்முறையீடு செய்ய இரண்டு நாள் கால அவகாசமே தரப்பட்டுள்ளது.

குழந்தைகள் உட்பட அகதிகளாக வருவோர் அனைவரும் தமதுபெருவிரல் அடையாளத்தைப் பதிவு செய்ய வேண்டும் என்பதைப் பலர் கண்டித்துள்ளார்கள். இந்தப் புதிய கெடுபிடிகளினால் உண்மையான அகதிகள்கூட இங்கு வருவது சாத்தியமில்லை என்று பல நிறுவனங்கள் அச்சம் தெரிவித்துள்ளன.

## நிவாரண கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக ஊனமடைந்து கடும் பாதிப்புக்குள்ளானோர் தத்தமது கிராமசேவையாளரூடாக நிவாரணத்திற்கு விண்ணப்பித்து இதுவரை நிவாரணம் பெறாதவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலாளர் பணிமனையில் நேரடியாக வந்து தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளும்படி யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி அறிவித்துள்ளது.

இவர்கள் கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவப் பற்றுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை வங்கிக்கணக்குப் புத்தகம்,

# ஜே. வி. பி. சந்தேகநபர் இராணுவத்தில் கண்டுபிடிப்பு

(மாத்தறை)

அரச உடைமைகளுக்கு தீயிடல், பாலம், மதகுகள் உடைத்து அரச விரோத செயல்களிலும்வன்முறைகளிலும் ஈடுபட்டுவந்த ஒருவர் இராணுவ சேவையில் இருந்துள்ளார் ஓர் ஆண்டுக்கு பின்ன சந்தேகத்தின் பேரில் பொலிசார் கைது செய்துள்ளார்கள்.

அக்மன பிரதேசத்தை சேர்ந்த மேற்படி நபர் ஜே வி. பி. காலத்தில் வன்முறைகளுக்கு பிரதான காரணகர்த்தாவாக இருந்துள்ளார். இராணுவத்தில் சேர்வதற்கு போலியான வீட்டு விலாசமும் பொலிஸ் கிராமசேவகர் சான்றிதழ்கள் என்பன தான் வதியாத இடத்

கொடர்பாகபுலன் விசாரணை தொடர்வதுடன், இவர் இராணுவத்தில் சேர்வதற்கான பின்னணி ஏதாவது இருக்கலாம் என சந்தேகமும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கபடுகிறது இவரைப் போல் இன்னும் பலர் இராணுவத்தில் இணைந்திருக்கலாம் என பொலிஸ் வட்டாரங்கள் கருதுகின்றன.

இவர் இராணுவ சேவை காலத்தில் தமது கிராமத்திற்கு வந்து முன்னர் இவருடன் செயல்பட்டவர்களை சந்திக்கும் போது கைது செய்யப்பட்டார்இவருடன் இவரது சகாக்களும் கைது செய்யப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது

## வவுனியாப் பகுதியில் ஆடைத் தொழிற்சாலை பிரேமா திறந்துவைப்பார்

(வவுனியா)

வவுனியா கண்டிவீதி, தேக்கவத்த, நவகம ஆகிய இடங்

குறிப்பிடத்தக்கது. இதில் விரல்விட்டு எண்ணக் கூடிய தமிழ் இளைஞர், யுவதிகளே

## கறுவாக்காடு

வர்களே சமூக அந்தஸ்து மிக்கவர்களாக மிளிர முடியும் என்ற நிலை இதுகாலவரை இருந்து வந்தது. இந்த நிலை இப்போது முடிவடைந்துள்ளது

## கிளாலி

## இராணுவத்தால்

வேளை கிழக்கிலங்கையில் மனித உரிமைகளுக்கான சர்வதேச குழு கிழக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வீரவணக்கம்

இவரது புகழுடல் நேற்று

## கடலக வளம்

உடன் மேற்கொள்ளவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி திட்டம் பின்வருமாறு நடைமுறைப்படுத்தப்படும்:

1. ஆண்டு 4, 5, 6 ஆகிய வகுப்புக்களில் விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களில் பொருத்தமான இடங்களில் கடலக வளம் பற்றிய அறிவைத் தொடர்புபடுத்தி வலியுறுத்தல்.
2. ஆண்டு 7, 8 இல் வாழ்க்கைத்திறன் பாடத்தில் கடலகவளம் தொடர்பான திறன்களைக் கற்பித்தல்.
3. ஆண்டு 9-11 வரையில் தொழில்நுட்பப் பாடமாகக் கற்பித்தல்.

இதற்கான வாழ்க்கைத் திறன் கற்றல் நிகழ்ச்சிகளையும் ஏனைய பாடத்திட்டத்தையும் யாழ்ப்பாண கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் தயாரித்துள்ளது. இதற்கான

வங்கிக்கணக்குப் புத்தகம், துவாரங்கள் இடப்பட்ட குடும்பப்பதிவு அட்டை, இரண்டு ரூபாய் முத்திரை ஆகியவற்றுடன் சமுகமளிக்கும்படி கேடகப்பட்டுள்ளனர்.

கிராமசேவகர் சான்றிதழ்கள் என்பன தான் வதியாத இடத்தில் இருந்து பெற்று கொடுத்து இராணுவத்தில் சேர்ந்துள்ளார்.

இவர் இச் சான்றிதழ்களை எப்படிப் பெற்றார் என்பது


## பதவி வெற்றிடம்

பிரபல நிறுவனம் ஒன்றில் பொறுப்பு வாய்ந்த பணி நிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி பத்திரிகைத்துறையில் அனுபவம் உடையவராகவும், செய்திகள் சேகரித்தல், தொகுத்தல் போன்ற கடமைகளை திறமையுடன் செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும் வேலைத்திட்ட அறிக்கைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அறிக்கைகளை தயாரிப்பதில் ஆற்றல் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். கல்வித்தகைமை கல்விப்பொதுத்தராதார)சாதரண)பரீட்சையில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 10-11-1992.

விளம்பர இல 174,
மே/பா ஈழநாதம்,
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5346)



## 5-11-92 முதல்

# O/L

## PAPER CLASS

# யூனிவேர்சல்

## கந்தர்மடம்-யாழ்ப்பாணம்

(5339)


(வவுனியா)

வவுனியா கண்டிவீதி, தேக்கவத்த, நவகம ஆகிய இடங்களில் புதிய இரண்டு ஆடை தயாரிப்பு தொழிற்சாலைகள் அமைய இருப்பதாகவும், இத்தொழிற்சாலைகளை இம் மாதம் 28-ம் திகதி சிறிலங்கா ஜனாதிபதி திறந்துவைப்பார் எனவும் வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இத்தொழிற்சாலைகள் வவுனியா சிங்களக் குடியிருப்புக் கிராமத்தை மையமாகக் கொண்டே இந்த இரு நிறுவனங்கள் அமைய இருப்பதும்

குறிப்பிடத்தக்கது. இதில் விரல்விட்டு எண்ணக் கூடிய தமிழ் இளைஞர், யுவதிகளே தொழில்வாய்ப்புப் பெறுவர்.

இத்தொழிற்சாலைகளை மையமாகக்கொண்டு இங்கு சிங்களக்குடியேற்றம் அதிகரிக்கப்படும் என அங்குள்ள தமிழ் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

### மீட்பு நிதி

பிரிவுகளிற்கான மீட்பு நிதி சேகரிப்பு எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமையும்,

உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான மீட்பு நிதி சேகரிப்பு 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும்,

கரவெட்டி, பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான மீட்புநிதி சேகரிப்பு 9-ம் திகதி திங்கட்கிழமையும் இடம் பெறும் என இவ் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது

### க. பொ. த.

முறையிலும் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

மேற்படி பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக அடையாள அட்டைகளை வழங்க ஆட்பதிவுத் திணைக்களம் விசேட ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இப்பரீட்சார்த்திகளுக்கான பிரவேச அட்டைகள் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் அனுப்பிவைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### மாநகர

கல்லூரியில்நடைபெறவுள்ளது இப்போட்டியில்வெற்றிபெறும் மாணவர்களுக்குக் கவர்ச்சிகரமான பரிசில்கள் வழங்கப்படுமென இப்போட்டிகளுக்கான நிர்வாக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார் (07)

ளது

### கிளாலி

நாட்டை நோக்கி வந்த இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இங்குவரமுடியாமல் ஆலங்கேணிப்பகுதியில் தங்கியிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### மோட்டார்

படுகிறது.

இவ்விரிவுரையாளர்களில் 50 பேருக்கு இம்முறையில் மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு உயர்கல்வி அமைச்சர் ஏ.ஸி.எஸ் ஹமீத் இணக்கம் தெரிவித்துள்ளார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இதற்குரிய மண்ணெண்ணெயை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### வீரவணக்கம்

இவரது புகழுடல் நேற்று முன்தினம் மக்களின் அஞ்சலிக்காக யாழ். கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் வைக்கப்பட்டது. பின்பு கைதடி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இதில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் திரு. அறவாளன், தென்மராட்சி கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. அன்பரசன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர். இம்மாவீரருடைய புகழுடலுக்கு பெருந்திரளான மக்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர் பின் இராணுவ மரியாதையுடன் கொடிகாமம் மாவீரர்துயிலும் இல்லத்தில் இவரது புகழுடல் விதைக்கப்பட்டது (86)

பணியாளர்களை அறிவுறுத்தலுக்கமைய தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் தயாரித்துள்ளது. இதற்கான செயலமர்வு கடந்தமாதம் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண பல்கலைக்கழக விலங்கியற்துறையின் அனுசரணையுடன் விலங்கியற்துறையில் நடைபெற்றது. இதில் 30 ஆசிரியர்கள் பங்குபற்றினர். இச் செயலமர்வின் போது ஆண்டு 7, 8 ஆம் வகுப்புகளில் கற்பிப்பதற்கான கற்றல் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன

19-12-92, 20-12-92 ஆகிய தினங்களில் விஞ்ஞான ஆலோசகர்களுக்கும், சமூகக் கல்வி ஆலோசகர்களுக்கும் கடலக வளக் கல்வி தொடர்பான பயிற்சி யாழ் பல்கலைக்கழக விலங்கியல் துறையில் நடாத்தப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

## 02. 11. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6432

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:-

41-9663, 22-6666, 26-1735, 42-1464, 27-7952, 24-5036, 24-1635, 42-7975, 27-2035, 41-9327 26-9745, 26-6984, 42-1182.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்;-

26-5113, 26-9992, 26-2745, 41-1799, 27-8515, 24-5137, 26-5244, 42-6119, 42-9625, 42-0488, 42-0728, 26-6842.


## தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடங்கள்

## உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

| | | |
|---|---|---|
| கல்வித் தகைமைகள்:- | | 8-ம் வகுப்பு தொடக்கம் க.பொ.த (உயர்தரம்) வரை |
| உயரம் | :- | 5' 6" |
| வயது | :- | 18 தொடக்கம் 30 வரை |

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 5-11-1992 ஆம் திகதிவரை நாவலர் வீதியிலுள்ள காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாகச் சமுகம் தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும், நேர்முகத்தேர்வின் இறுதித்தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாக சமுகம் தரவும்.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
காவல்துறை, தமிழீழம்.

(5340)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.